# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

*தபால் பெட்டி எண் - 9,* No.*8, பாரதியார் 2 வது தெரு,* S.S. *காலனி மதுரை – 10.* Ph. 0452 – 4354302


## இரட்சிப்பின் நிச்சயம்

**முன்னுரை :**

பல ஆண்டுகளுக்கு முன்பாக நியூயார்க்கிலே நடந்த ஒரு கூட்டத்தில் கர்த்தருக்கு அர்ப்பணித்த அருமையான ஒரு சகோதரியை சந்தித்தேன். அவர்களிடத்தில் இரட்சிப்பைக் குறித்து கேட்டபோது, ‘‘நான் இரட்சிக்கப்பட்டவள் என்று அறிந்திருக்கிறேன் என்று சொல்ல அவ்வளவு துணிச்சல் எனக்கு இல்லை’’ என்று பதில் கூறினார்கள். இவர்களைப் போலவே இன்றும் ஆலயம் செல்லுகிற ‘கிறிஸ்தவர்கள்’ என்று அழைக்கப்படுகிற இலட்சக்கணக்கானோர்’நித்திய ஜீவனைக்’ குறித்ததான நம்பிக்கை இல்லாததினால் இப்படிப்பட்ட பதிலையே கூறுகிறார்கள். இது எத்தனை வியப்பாகவும், வேதனையாகவும் இருக்கிறது. இந்தப் பாடம் ஆண்டவருக்காக சில அர்ப்பணங்களை செய்தும், தங்கள் நித்திய முடிவைக் குறித்ததான நிச்சயம் இல்லாமல் பயத்துடன் வாழ்ந்துகொண்டிருக்கிறவர்களின் ஆழமான தேவையை சந்திக்கும்படியாக ஆயத்தம் செய்யப்பட்டிருக்கிறது. இரட்சிப்பின் நிச்சயம் இல்லாத மக்களிடத்திலே, ‘‘இரட்சிக்கப்பட்டுவிட்டீர்களா?’’ என்று கேட்கும்பொழுது, ‘‘அப்படித்தான் நினைக்கிறேன், நான் நம்புகிறேன், நான் முயற்சி செய்து கொண்டிருக்கிறேன், எனக்குத் தெரியாது’’ போன்ற சில பதில்களை கூறுவார்கள். இந்தப் பாடம் நாம் இரட்சிக்கப்பட்டு தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என்பதைக் குறித்து சிறு சந்தேகம்கூட இல்லாமல் எப்படி வாழலாம் என்று போதிக்கிறது.

### இந்தப் பாடத்தின் முக்கியத்துவம் :

இரட்சிப்பின் நிச்சயம் இல்லாமல் ஒரு விசுவாசி உண்மையான அல்லது நிலையான சந்தோஷத்தை அனுபவிக்க முடியாது. அத்துடன் இது பயத்தையும், அவநம்பிக்கையையும் உண்டாக்குகிறது. இரட்சிப்பின் நிச்சயம் உள்ள விசுவாசிகள் மட்டும்தான் தேவனுடைய வாக்குத்தத்தத்திலும், வல்லமையிலும் சார்ந்து இருப்பார்கள். மற்றவர்களுக்கு எந்தவித பாதுகாப்பு உணர்வும் இருக்காது. பாவம் மன்னிக்கப்பட்ட நிச்சயம் உள்ளவர்கள் மட்டும்தான் பரலோகத்தைப் பற்றியதான நிலையான நம்பிக்கை தங்கள் இருதயத்தில் உள்ளவர்களாக வாழ்வார்கள். மற்றவர்களுக்கு இந்த நம்பிக்கை இருக்கமுடியாது. பரிசுத்த ஆவியானவராலே ஒரு விசுவாசி முழுமையாகப் பயன்படுத்தப்படவேண்டுமானால் அவன் இரட்சிப்பின் நிச்சயம் உடையவனாக இருக்கவேண்டும்.

நீங்கள் ஏற்கனவே இரட்சிப்பின் நிச்சயம் உடையவர்களாக இருப்பீர்களேயானால் இப்பாடம் உங்கள் விசுவாசத்தை பலப்படுத்த உதவிசெய்யட்டும்.

**பாடம்**

### I. இந்த இரட்சிப்பின் நிச்சயத்தைப்பற்றி வேதாகமம் ஏதும் கூறுகிறதா?

ஆம், கீழே குறிப்பிடப்படுகிற வழிகளில் வேதாகமம் கூறுகிறது :

அ. கொலோசெயர் 2:2, ‘‘அவர்களுடைய இருதயங்கள் தேற்றப்பட்டு , அவர்கள் அன்பினால் இணைக்கப்பட்டு, பிதாவாகிய தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியத்தை அறிந்துகொள்ளுகிற உணர்வின் பூரண நிச்சயத்தினுடைய எல்லா ஐசுவரியத்திற்கும் உரியவர்களாக வேண்டுமென்றே இப்படி விரும்புகிறேன்’’. ‘‘ஐசுவரியம்’’ என்ற வார்த்தையைக் கவனியுங்கள். பூரண நிச்சயம் உடையவனுக்கு என்ன ஐசுவரியம் இருக்கிறது? மனிதனாக வெளிப்பட்ட தேவனையும் சரீரமாகிய சபைக்கு தலையாகிய கிறிஸ்துவையும் குறித்ததான தேவ இரகசியத்தை புரிந்துகொள்வதே அந்த ஐசுவரியமாகும்.

ஆ. எபிரெயர் 6:12, ‘‘உங்களுக்கு நம்பிக்கையின் பூரண நிச்சயமுண்டாகும்படி நீங்கள் யாவரும் முடிவுபரியந்தம் அப்படியே ஜாக்கிரதையைக் காண்பிக்கவேண்டு மென்று ஆசையாயிருக்கிறோம்’’. இந்த ஆச்சரியமான நம்பிக்கை என்ன வென்றால், கிறிஸ்து மறுபடியும் வரப்போகிறார் என்பதும், நம்முடைய இரட்சிப்பு பூரணப்படப் போகிறது என்பதும், தேவனுடைய எல்லா வாக்குத்தத்தங்களும் நிறைவேறப்போகிறது என்பதுமே ஆகும்.

இ. எபிரெயர் 10:22, ‘‘... விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்.’’இங்கே சொல்லப்படுகிற நிச்சயம் முழுமையான விசுவாசத்தின் விளைவாக ஏற்படுகிற நிச்சயமாகும். வேறு வார்த்தையில் கூறுவோமேயானால் ஆண்டவர் அளிக்கிற எல்லாக் காரியத்தையும் முழுமையாகப் பற்றிக்கொண்டு விசுவாசிப்பதினால் ஏற்படுவதாகும்.

ஈ. ஏசாயா 32:17, "நீதியின் கிரியை சமாதானமும், நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம்."போர் முடிந்தது! கிறிஸ்து சிலுவையிலே பலியிடப்பட்டு தேவநீதியை திருப்தி செய்தபடியினாலே சிலுவையிலேயே சமாதானமும் சம்பாதிக்கப்பட்டாயிற்று. இப்பொழுது சிலுவையிலே செய்து முடிக்கப்பட்ட அந்தக் கிரியையிலே விசுவாசத்தை வைக்கிறவனுக்கு என்றென்றுமுள்ள அமரிக்கையும் நம்பிக்கையும் கிடைக்கிறது. இது நிச்சயத்தைக் குறிக்கிறது.

**குறிப்பு :**

கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை வைக்கிறவன் முழு நிச்சயம் உடையவனாக இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்பதை மேலே நாம் பார்த்த வாக்கியங்களிலிருந்து அறிந்துகொள்ளுகிறோம்.

## II. நீ இரட்சிக்கப்பட்டிருக்கிறாய் என்பதை அறிந்திருக்க முடியும் என்று வேதம் சொல்லுகிறதா?

கீழே கூறப்பட்டிருக்கிறவைகளை கவனிக்க :

அ. யோபு 19:25–27, "என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்; இந்த என் தோல் முதலானவை அழுகிப்போன பின்பு நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன்; அவரை நானே பார்ப்பேன்: அந்நிய கண்களல்ல, என் கண்களே அவரைக் காணும்..."

(யோபுவின் புத்தகம் வேதாகமத்திலே பழமையான புத்தகமாக இருக்கிறது. யோபு ஒரு பண்டைக் காலத்து மனிதனாக இருந்தபோதிலும் தேவனைக் குறித்த இப்படிப்பட்ட நம்பிக்கை உள்ளவனாக இருந்ததைப் பார்க்கும்பொழுது ஆச்சரியப்படதக்கதாக இருக்கிறது).

ஆ.2 தீமோத்தேயு 1:12, "... நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன். நான் அவரிடத்தில் ஒப்புக் கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்." கிறிஸ்துவையும் அவருடைய காத்துக்கொள்ளும் வல்லமையையும் எந்த அளவிலும் சந்தேகம் இல்லாமல் தன் நம்பிக்கையை இங்கே பவுல் எழுதுகிறார்.

இ. யோவான் 10:15, "நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்." இங்கே தேவன் தெளிவாக கூறுவது என்னவென்றால் நான் என் ஆடுகளை அறிந்திருக்கிறது மட்டுமல்ல, என்னுடைய ஆடுகள் எல்லாம் என்னையும் அறிந்திருக்கின்றன என்று கூறுகிறார்.

## III. பழைய ஏற்பாட்டு, புதிய ஏற்பாட்டு மனிதர்கள் தாங்கள் இரட்சிக்கப்பட்டவர்கள் என்று அறிந்திருந்தார்களா?

அ. பழைய ஏற்பாட்டு மனிதர்கள் :

1. **ஆபேல் :** எபிரெயர் 11:4 – ஆதாமின் இரண்டாவது மகன் ஆபேல் தேவனிடத்திலிருந்து நீதிமான் என்று சாட்சி பெற்றவனாயிருந்தான்.
2. **நோவா :** ஆதியாகமம் 7:1 – "நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்; இந்தச் சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன்." ஆதியாகமம் 6:9–ஐ வாசியுங்கள். நோவா தன் காலத்தில் இருந்தவர் களுக்குள்ளே உத்தமனாயிருந்தான். தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான். தேவன் நோவாவை நீதிமான் என்று கூறினார். இந்த நிச்சயம் போதுமானதே.
3. **ஆபிரகாம் :** ஆதியாகமம் 15:6 – "அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்" அதே வசனத்தை பவுலும் ரோமர் 4:3–லும், கலாத்தியர் 3:6லும் குறிப்பிடுகிறார். இதிலே பவுல், நாம் எல்லோரும் விசுவாசத்தினால் மட்டுமே நீதிமான்களாக்கப்படுகிறோம் என்பதை நமக்குக் கற்றுக் கொடுக்கிறார்.
4. **யோபு :** யோபு 19:25–27 (இதை ஏற்கனவே II–அ–ல் பார்த்துவிட்டோம்) யோபுவினுடைய இரட்சிப்பின் நிச்சயத்தை இந்த வசனங்களில் சந்தேகிக்க முடியாது.
5. **தாவீது** : சங்கீதம் 40:2, "பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கியெடுத்து என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, என் அடிகளை உறுதிப்படுத்தி" தேவனுடைய இரட்சிப்பின் வல்லமையை இதற்குமேலே தெளிவாகக் கூறக்கூடிய சாட்சி வேண்டுமா?

   சங்கீதம் 51:12, "உமது இரட்சண்யத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து..."பாவம் அவனுடைய சந்தோஷத்தை திருடிவிட்டது. ஆனாலும் இன்னும் அவன் இரட்சிப்பின் நிச்சயம் உடையவனாக இருக்கிறான்.
6. **ஏசாயா :** ஏசாயா 6:7, "...இதோ இது உன் உதடுகளைத் தொட்டதினால் உன் பாவம் நிவிர்த்தியானது என்றான்."இங்கே ஏசாயா தேவனிடத்திலிருந்து நேராகப் பாவமன்னிப்பு பெற்றுக்கொண்டு இரட்சிப்பின் நிச்சயம் உடையவனாக இருக்கிறான்.

ஆ.புதிய ஏற்பாட்டு மனிதர்கள் :

1. **பேதுருவின் சாட்சி :** 2 பேதுரு 1:10, "... உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்." நீ உன் இரட்சிப்பை முழுமையாக நிச்சயப்படுத்திக்கொள்ள முடியும். 1 பேதுரு 1:3–5ஐ வாசியுங்கள். விசுவாசிகள் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டு இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே அழியாததும், மாசற்றதும், வாடாதது மாகிய சுதந்திரத்தை உடையவர்களாகவும், தேவனுடைய பலத்தினாலே காக்கப்படுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். இந்த வசனங்கள் நமக்குப் பெரிய நிச்சயத்தை கொடுக்கிறதாய் இருக்கிறது.
2. **யோவானின் சாட்சி :** 1 யோவான் 2:3, "அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதனால் அறிவோம். 1 யோவான் 3:14, "நாம் சகோதரரிடத்தில் அன்பு கூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம். . ." "1 யோவான் 4:13, "அவர் தம்முடைய ஆவியை நமக்குத் தந்தருளினதினாலே நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம்." யோவான் எழுதுகிறதெல்லாம் இரட்சிப்பின் நிச்சயத்தையே குறிக்கிறது. யோவான் தன்னுடைய இரட்சிப்பைக் குறித்து எந்தவித சந்தேகமும் இல்லாதவராய் இருந்தார்.
3. **பவுலின் சாட்சி :** 2 தீமோத்தேயு 1:12 (ஏற்கனவே இதை II-ஆ–ல் குறிப்பிட்டிருக்கிறோம்) தேவன் கடைசி நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறார் என்பதின் மேல் முழு நிச்சயம் உடையவராய் இருந்த படியினாலே பாடுகளைக் குறித்து வெட்கப்படாதவராய் இருந்தார்.
4. **இயேசுகிறிஸ்துவின் சாட்சி :** யோவான் 10:15 (இதை ஏற்கனவே II–இல் குறிப்பிட்டிருக்கிறோம்). இயேசு கூறுகிறார், "நான் என்னுடையவைகளைஅறிந்தும் என்னுடையவை களால் அறியப்பட்டுமிருக்கிறேன்." நாம் அறியமுடியுமா? சீஷர்கள் அறிந்திருந்தார்களா? இப்படிப்பட்ட கேள்விகளுக்கு இதுவே முழுமையான பதிலாக இருக்கிறது.
5. **பிறவிக் குருடனின் சாட்சி :** யோவான் 9:25, "அவர் பாவியென்று எனக்குத் தெரியாது; நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்; இது ஒன்றுதான் எனக்குத் தெரியும் என்றான்."

இந்தப் பகுதியில் மற்ற வசனங்களை வாசிக்கும்பொழுது இவன் ஆவிக்குரிய கண்களையும் பெற்றுக்கொண்டான் என்பது புலனாகிறது.

## IV. ஆலயம் செல்லுகிற, கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிற இலட்சக்கணக்கானோர் ஏன் இரட்சிப்பின் நிச்சயமற்றவர்களாய் இருக்கிறார்கள்?

### அ. ஆரம்பத்தில் இருந்தே தவறான விசுவாசம் :

'ஆரம்பத்தில் இருந்து'என்று நான் சொல்லும்பொழுது ஒருவர் ஒரு குறிப்பிட்ட மதத்தில் சேர்வதினாலேயோ, ஒரு குறிப்பிட்ட ஞானஸ்நானத்தை எடுத்துக் கொள்வதினாலேயோ, ஒரு குறிப்பிட்ட சபையை சேர்ந்துகொள்வதினாலேயோ இரட்சிப்பின் நிச்சயத்தை ஒருபோதும் பெற்றுக்கொள்ள முடியாது என்பதைக் கூற விரும்புகிறேன். ஏனென்றால் :

1. அங்கே உண்மையான மனந்திரும்புதல் இல்லாமல் இருக்கலாம் (லூக்கா 13:3; அப்போஸ்தலர் 17:30).
2. சத்தியத்தை ஏற்றுக்கொண்டது இருதயத்திலே இல்லாமல் அறிவின் அளவிலேயே இருக்கலாம் (ரோமர் 10:9,10).
3. கிறிஸ்துவோடு உள்ள ஐக்கியம் இல்லாமல் இருக்கலாம். ஒருவர் இரட்சிப்பிற்காக ஆலயத்திற்கு வந்தால் போதாது. அவர் கிறிஸ்துவினிடம் போகவேண்டும் (யோவான் 6:37; மத்தேயு 11:28). கிறிஸ்துவே இரட்சகர் என்றும், ஆண்டவர் என்றும் அறிக்கைசெய்து (ரோமர் 10:9), விசுவாசித்து ஏற்றுக்கொள்ளவேண்டும் (யோவான் 1:12).

### ஆ. தொடர்ந்து பின்பற்ற தவறிவிடுதல் :

அப்போஸ்தலர் 2:41,42ஐ வாசிக்கவும். பெந்தெகொஸ்தே நாளாகிய கிறிஸ்தவத் தின் ஆரம்ப நாட்களில் விசுவாசிகள் ஏழு காரியங்களை செய்துவந்தார்கள்.

1. "வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள்" இரட்சிக்கப்பட்டார்கள்.
2. ஞானஸ்நானம் பெற்றார்கள்.
3. சபையிலே சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.
4. "அப்போஸ்தலருடைய உபதேசத்திலே" உறுதியாய் தரித்திருந்தார்கள்.
5. அந்நியோந்நியத்தில் அதாவது மற்ற விசுவாசிகளோடு ஐக்கியம் உடையவர்களாயிருந்தார்கள்.
6. அப்பம் பிட்குதலில் உறுதியாய் தரித்திருந்தார்கள்.
7. ஜெபத்திலும்–ஜெப வாழ்க்கையை வளர்த்துக்கொண்டார்கள்.

இந்த முறையை இலட்சக்கணக்கான விசுவாசிகள் பின்பற்ற தவறுகிறார்கள். அநேகர் பார்வையாளர்களாக மட்டுமே இருக்கிறார்களே ஒழிய, செயலில் ஈடுபடுவது கிடையாது. சிலர் கிறிஸ்துவின் மன்னிப்பைபெற்றுக் கொண்டிருக்கிறேன் என்று கூறியும் கிறிஸ்தவனைப்போல செயல்பட ஆரம்பிக்கிறதில்லை. இந்த நிலையில் நாம் தொடரும்போது நம்மை சந்தேகத்திற்கே வழிநடத்தும், இரட்சிப்பின் நிச்சயத்தை கொடுக்கமுடியாது.

**இ. தங்களை வசனத்தின்மீது கட்டத் தவறிவிடுதல் :**

சில நாட்களுக்கு முன்பதாக நான் ஒரு பெண்ணை ஆண்டவருக்குள்ளாக வழிநடத்தினேன். அவள் ''இதற்கு முன்பதாக மூன்றுமுறை பிரசங்கியார் அழைப்புக் கொடுத்தபொழுது முன்பாக சென்றிருக்கிறேன்'' என்று கூறினாள். நான் வேதாகமத்திலிருந்து வசனத்தை தெளிவாக எடுத்துக் காண்பித்தபொழுது கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டாள். உடனே அவள் சொன்னகாரியம், ''இதுவரை ஒருவரும் வேதாகமத்திலிருந்து தெளிவாக எடுத்துக் காண்பிக்கவில்லை'' என்றாள். இது எவ்வளவு பயங்கரமான காரியம். இன்றைக்கும் லட்சக்கணக்கான கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தை தேவனுடைய வாக்குத்தத்தத்தின் மீது கட்டுவது கிடையாது.

ரோமர் 10:17, ''விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.''

மாற்கு 4:20, ''வசனத்தைக் கேட்டு ஏற்றுக்கொண்டு.... இவர்களே நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள்,''

1 பேதுரு 1:23, ''அழிவுள்ளவித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.'' தேவ வசனமே உங்களுடைய இரட்சிப்புக்கு முழுமையான உறுதிகொடுக்கும் 1 யோவான் 5:10–12ஐ வாசிக்கவும்.

**ஈ. உணர்ச்சிகளே அநேக நேரங்களில் விசுவாசத்திற்குப் பதிலாக எடுத்துக் கொள்ளப்படுகிறது :**

'ஓல்டு ஸ்காட்ஸ்மேன்' (Old Scotsman) போன்ற சில பெரியவர்கள் மதத்தைக் குறித்து கூறியதாவது, ''மதங்கள் சொல்லப்படுவதைவிட நன்றாக உணரப் படுகிறது.'' ஆனால் இரட்சிப்பைப் பொறுத்தவரை வழக்கத்திற்கு மாறான உணர்ச்சிகளோ சில உணர்வுகளோ தேவைப்படுவதும் இல்லை, வாக்குப் பண்ணப்படவும் இல்லை.

1. கவனமாக வாசிக்கவும் : யோவான் 1:12; 3:16; 5:24; 10:9; அப்போஸ்தலர் 16:31; ரோமர் 10:9,10.

   வேதாகமத்திலுள்ள மேலே குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான வாக்கியங்களில் இரட்சிக்கப்படுவதற்கு சிறிதளவேனும் உணர்ச்சிகள் தேவைப்படுகின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதா? இல்லவே இல்லை.

2. நிலையான நம்பிக்கை உணர்ச்சிகளிலிருந்து பிறப்பவை அல்ல, விசுவாசத் திலிருந்து பிறப்பவை ஆகும். உங்களுக்கு இருதய நோய் ஏற்பட்டுவிட்டது என்று நினைத்துப் பயப்படுகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதினால் நாட்டிலுள்ள பெரிய இருதயநோய் மருத்துவரிடம் சென்று அவர் உங்களை முழுமையாக பரிசோதித்துவிட்டு இருதய நோய்க்கான அறிகுறியே இல்லை என்று திட்டவட்டமாக கூறிவிடுகிறார். இதனால் உங்கள் பயம் நீங்கி சந்தோஷமும் நிம்மதியும் அடைகிறீர்கள். உங்கள் சந்தோஷத்திற்கு காரணம் என்ன? படித்த, அதிகாரமுள்ள மருத்துவர் மீது நீங்கள் வைத்த நம்பிக் கைதானே! அது போலவே இரட்சிப்பின் நிச்சயமும் சர்வ அதிகாரமுள்ள தேவன்மீதும், அவர் வார்த்தைமீதும் வைக்கிற விசுவாசத்தினாலே வருவதாகும்.

3. சிலர் தாங்கள் இரட்சிக்கப்படும்பொழுது பலவிதமான உணர்ச்சிகளை அனுபவத்தில் பெற்றோமென்று கூறுவது மட்டுமல்லாமல் மற்றவர்களும் அதே அனுபவத்தை பெறவேண்டும் என்று வற்புறுத்துவதினால் குற்றமுள்ளவர்களாகிறார்கள். இரட்சிப்பு ஒரு உண்மையாகும். ஆனால் அது ஒரு உணர்ச்சி அல்ல.

4. உணர்ச்சிகள் நிலையானதல்ல. மாறிப்போகக்கூடியது. உண்மைக்குப் பதிலாக உணர்ச்சிக்கு இடம் கொடுக்க வேண்டாம்.

**உ. தேவனோடுள்ள ஐக்கியம் – தேவனோடுள்ள உறவு :**

1. அநேக கிறிஸ்தவர்கள் தேவனோடுள்ள ஐக்கியத்திற்கும், உறவிற்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளாததினாலே குழப்பமும், இரட்சிப்பின் நிச்சயம் இல்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். தேவனோடுள்ள ஐக்கியம், நாம் அவருக்கு விரோதமாக செய்யும் ஒரு பாவத்தினாலே உடைந்துபோக முடியும். தேவனோடுள்ள நம்முடைய உறவு தேவனின் தெரிந்து கொள்ளு தலிலும், அவருடைய அநாதி தீர்மானத்திலும், அவருடைய வாக்குத்தத் தத்திலும், சிலுவையில் சிந்தப்பட்ட கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையிலும், அவர் நமக்காகப் பரிந்து பேசுவதிலும் சார்ந்ததாக இருக்கிறது.

2. தாவீது இதற்கு ஒரு சரியான எடுத்துக்காட்டு. சங்கீதம் 51–ஐ வாசிக்கவும். 12–வது வசனத்தில் தாவீது தான் செய்த பாவத்தை உணர்ந்தவுடன் இரட்சிப்பின் சந்தோஷத்தை இழந்து போகிறான். ஆனால் இரட்சிப்பை

இழந்துபோகவில்லை. பாவத்தினால் தாவீதுக்கும், தேவனுக்கும் இடையே உள்ள ஐக்கியம் பாதிக்கப்பட்டதே ஒழிய தேவனோடுள்ள உறவு பாதிக்கப்படவில்லை.

3. கணவன், மனைவிக்கு இடையே உள்ள உறவு, ஐக்கியம் இவைகளை உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். இவர்களுக்கு இடையே கருத்து வேறுபாடுகளோ, மனஸ்தாபங்களோ ஏற்படும் பொழுது ஐக்கியம் பாதிக்கப்படுகிறது. ஆனால் கணவன், மனைவி என்ற உறவு பாதிக்கப்படுவதில்லை. ஒருவருக்கொருவர் மன்னிப்புக் கேட்டு மன்னிக்கும் பொழுது பாதிக்கப்பட்ட ஐக்கியம் நிவர்த்தி செய்யப்படுகிறது.

**ஊ. கிறிஸ்து செய்துமுடித்த கிரியையை எப்போதும் முழுமையாக புரிந்து கொள்வதில்லை :**

1. கிறிஸ்து சிலுவையில் மரித்தபொழுது ‘‘முடிந்தது’’ என்று கூறினார் (யோ.19:30). இங்கே எழுகிற கேள்வி என்னவெனில், ‘‘என்ன முடிந்தது?’’

   a. கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார் (ரோமர் 10:4; மத்தேயு 5:17).

   b. நியாயப்பிரமாணத்தின் சாபம் நம்மை விட்டு நீக்கப்பட்டது (கலாத்தியர் 3:10–13). கிறிஸ்து நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்து அவற்றை நம்மை விட்டு அகற்றினார் (2 கொரிந்தியர் 5:21; 1 பேதுரு 2:24; எபிரெயர் 9:26). நம்முடைய பாவத்திற்குத்தக்கதாக நீதியுண்டாக்கப்பட்டு, தேவநீதி திருப்தி செய்யப்பட்டது (ரோமர் 4:25; அப்போஸ்தலர் 2:24,30,36). நம்முடைய இரட்சிப்பும், மன்னிப்பும் கிரயத்துக்கு கொள்ளப்பட்டதாகும் (எபேசியர் 1:7; ரோமர் 3:24; கலாத்தியர் 4:5).

2. எல்லாக் கிரியைகளும் செய்து முடித்தாயிற்று என்பதினால் நாம் செய்யும் கிரியைகள் நம்மை இரட்சிக்க முடியாது. நீங்கள் இரட்சிப்பை விலைக்கு வாங்கவும் முடியாது. இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள தகுதியுள்ளவர்களாய் உங்களை ஆக்கிக்கொள்ளவும் முடியாது. இரட்சிப்பு முழுமையாக தேவனுடைய ஈவு ஆகும். அதோடு அதற்கான கிரயம் ஏற்கனவே செலுத்தப் பட்டாயிற்று.

   உணவு ஆயத்தமாக இருக்கிறது, நீ வந்து சாப்பிடவேண்டும் என்பதைத்தான் தேவன் எதிர்பார்கிறார். இரட்சிப்பிற்கான கிரியைகள் எல்லாம் செய்துமுடித்தாயிற்று. அந்த கிரியையிலே நீ சார்ந்துகொண்டு மகிழவேண்டும் என்பதுதான் தேவனுடைய ஆசை. உணர்ச்சிகளுக்காக எதிர்பார்த்துக் கொண்டிராமல் ‘உண்மையில்’ (Facts) மகிழ்ந்து களிகூருங்கள். இரட்சிப்பை சம்பாதிக்க முயற்சிசெய்யாமல், முடிக்கப்பட்ட கிரியையிலே சார்ந்து கொள்ளுங்கள்.

**ஏ. உண்மையான விசுவாசிக்கு முழுமையான நிச்சயத்தை அளிக்கக்கூடிய மாறாத, மகிமையான, நித்தியமான உண்மைகள் :**

1. கிறிஸ்து நம்மை ‘‘முற்று முடிய இரட்சிக்கிறார்’’ (எபிரெயர் 7:25) – முற்று முடிய என்ற வார்த்தை ‘முழுமையாக’ என்ற பொருள்படும்.
2. தேவன் நம்முடைய பாவத்தை நீக்கி அவற்றை நம்மை விட்டு அகற்றினார் (எபிரெயர் 9:26; சங்கீதம் 103:12).
3. தேவன் நம்முடைய பாவத்தை மன்னித்து அதை நினையாமல் இருப்பார் (எபிரெயர் 8:12; 10:17).
4. விசுவாசிகளை என்றென்றைக்கும் பூரணப்படுத்துகிறார் (எபிரெயர் 10:14).
5. தேவன் நம்மை நீதிமான்களாக்கியிருக்கிறார். அவர் நம்மை குற்றப்படுத்தவும் மாட்டார் (ரோமர் 8:33).
6. உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள்பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று நம்பி. . . (பிலிப்பியர் 1:5).
7. நாம் தேவனுடைய பெலத்தினாலே காக்கப்பட்டிருக்கிறோம் (1 பேதுரு 1:5).
8. விசுவாசிகளாகிய நாம் தேவனுடைய பிள்ளைகளாயும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாய் இருக்கிறோம் (ரோமர் 8:16,17; கலாத்தியர் 4:6,7).
9. விசுவாசிகளாகிய நம்மை எந்தச் சூழ்நிலையும் கிறிஸ்துவின் அன்பை விட்டு பிரிக்கமுடியாது (ரோமர் 8:38,39).
10. விசுவாசிகள் எல்லாரும் பெற்றிருக்கிற பரிசுத்த ஆவியானவரே நாம் தேவனுடைய சுதந்திரராயிருக்கிறோமென்பதற்கும், கிறிஸ்துவின் நாளிலே மீட்கப்படுவோமென்பதற்கும் முத்திரையாகவும், அச்சாரமாகவும் இருக்கிறார் (எபேசியர் 1:14; 4:30).
11. கிறிஸ்து தன்னுடைய ஆடுகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறார் (யோவான் 10:28). அதோடு நாம் ஒருபோதும் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படமாட்டோம் (யோவான் 5:24).

## VI. நிலையான நிச்சயத்திற்கு நடத்தும் படிகள் :

1. பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள்ளே பாவ உணர்வையும், இரட்சிப்பின் தேவையையும் சுவிசேஷத்தின் மூலமாக எழுப்புவாராக (அப்போஸ்தலர் 2:37; 16:30,31).
2. உண்மையாக மனந்திரும்புங்கள், உங்கள் சிந்தையை மாற்றுங்கள், விக்கிரகங்களை விட்டு தேவனிடத்துக்குத் திரும்புங்கள், பாவத்தை விட்டுவிட்டு கிறிஸ்துவுக்காக வாழத் தீர்மானியுங்கள் (லூக்கா 13:3; அப்போஸ்தலர் 17:30,31; 26:20; 1 தெசலோனிக்கேயர் 1:9).
3. இயேசுவே கிறிஸ்து என்றும் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனென்றும் (யோவான் 20:31), அவரே உன்னுடைய இடத்தில் மரித்தார் என்றும் (கலாத்தியர் 2:20), உன் பாவத்தை புறம்பே தள்ளிவிட்டார் என்றும் (எபிரெயர் 1:3; 9:26), பலத்த வல்லமையோடுகூட உயிர்த்தெழுந்தார் என்றும் (ரோமர் 1:5), உன்னைப் பாதுகாத்து உனக்காக பரிந்து பேசுவதற்காக ஜீவிக்கிறார் என்றும் (எபிரெயர்7:25), உன்னை அவரோடுகூட சேர்த்துக்கொள்வதற்காக மறுபடியும் வரப்போகிறார் என்றும் அறிந்துகொள் (யோவான் 14:3; 1 தெச.4:16).
4. கிறிஸ்து உன் ஆண்டவராகவும், இரட்சகராகவும் இருப்பதற்காக உன் வாயினால் அறிக்கைசெய்து (ரோமர் 10:9,10), விசுவாசத்தினாலே உன் இருதயத்தில் அவரை ஏற்றுக்கொள் (யோவான் 1:12; எபேசியர் 3:17).
5. உங்கள் விசுவாசத்தை கிறிஸ்துவினால் செய்து முடிக்கப்பட்ட கிரியையிலும், தேவனுடைய மாறாத வாக்குத்தத்தத்திலும் கட்டுங்கள், சந்தேகம் வேண்டாம்.
6. IV–ம் பிரிவு ஆ–ல் குறிக்கப்பட்டிருக்கிற காரியங்களை பின்பற்றுங்கள்.

குறிப்பு :

1. பாவம் இல்லாத தன்மை நாம் உயிர்த்தெழுந்த பின்புதான் நமக்குக் கிடைக்கிறது (1 யோவான்3:2).
2. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது தெய்வபக்தியிலும், முதிர்ச்சியிலும் ஏற்படுகிற சீரான வளர்ச்சி ஆகும் (1 பேதுரு 2:2; 2 பேதுரு 3:18; எபேசியர் 4:15; 2 தெச. 1:3).
3. நீ பாவத்திலே விழுந்து விடுவாயானால் உடனடியாக ஆண்டவரிடத்தில் உன் பாவத்தை அறிக்கைசெய் (1 யோவான் 1:9). அவர் உன் பாவத்தை மன்னிக்க எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறார்.

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்கு முன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# இரட்சிப்பின் நிச்சயம்

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**(பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்)**

**சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்**

1. இரட்சிப்பின் நிச்சயம் விசுவாசிகளுக்கு எதைக் கொண்டு வருகிறது ?
   a. பயம்
   b. நிலையான சந்தோஷம்
   c. சந்தேகம்
2. இரட்சிப்பின் நிச்சயத்தைக் குறித்து வேதாகமம் போதிப்பது என்ன ?
   a. நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்கிற நிச்சயத்தை அறிந்து கொள்ளலாம்
   b. நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்கிற நிச்சயத்தை அறிந்து கொள்ள முடியாது
   c. விசுவாசம், நற்கிரியைகள் மூலமாகவே நீங்கள் இரட்சிக்கப்பட முடியும்
3. அப்போஸ்தலனாகிய யோவான் தனது முதல் நிருபத்தை எழுதியதற்கு காரணம் என்ன ?
   a. உபதேசத்தை போதிப்பதற்கு
   b. இரட்சிப்பின் நிச்சயத்தை விசுவாசிகளுக்குக் கொடுப்பதற்கு
   c. போதகர்களுக்கு ஆலோசனை கொடுப்பதற்கு
4. பழைய ஏற்பாட்டில் தான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்பதை அறிந்தவர் யார் ?
   a. காயீன் b. யோபு c. நேபுகாத்நேச்சார்
5. அநேக கிறிஸ்தவர்களுக்கு இரட்சிப்பின் நிச்சயம் இல்லாததற்கான காரணம் என்ன ? (**மூன்றை** குறிக்கவும்)
   a. ஆரம்பத்திலிருந்து தவறான விசுவாசம்
   b. அவர்கள்அந்நிய பாஷை பேசுவதில்லை
   c. தொடர்ந்து பின்பற்ற தவறிவிடுதல்
   d. தங்களை வசனத்தின் மீது கட்டத் தவறிவிடுதல்
   e. அவர்கள் ஞானஸ்நானம் எடுக்கவில்லை
6. அநேக மக்கள் இரட்சிப்பின் நிச்சயத்திற்கு எந்த தவறான காரியத்தை சார்ந்திருக்கிறார்கள் ?
   a. தேவனின் வார்த்தையை மனப்பாடம் செய்ய மறுக்கின்றனர்
   b. விசுவாசத்திற்குப் பதிலாக உணர்ச்சியைச் சார்ந்திருப்பது
   c. சபைக் கூட்டங்களில் கலந்துகொள்ளத் தவறிவிடுவது
7. ஒரு விசுவாசி பாவமில்லாத பரிபூரண நிலையை எப்பொழுது அடைவார்கள் ?
   a. பரிசுத்த ஆவியால் நிரப்பப்படும் பொழுது
   b. வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பின் பொழுது
   c. உயிர்த்தெழுதலின்போது

**8.** கிறிஸ்தவ வாழ்க்கை என்பது என்ன ?

a. தேவபக்தியில் வளர்ந்து வரும் வாழ்க்கையாகும்

b. விசுவாசத்திற்குப் பதிலாக உணர்ச்சி இடம் பெறும் வாழ்க்கையாகும்

c. பாவமில்லாத பரிபூரணமான வாழ்க்கையாகும்

**9. பொருத்துக :–** (சரியான வசனத்தை வார்த்தைக்கு முன்பு எடுத்து எழுதவும்)

| | | |
|---|---|---|
| ————————— | இரட்சிப்பின் நிச்சயம் உடையவர்கள் ஆவிக்குரிய ஐசுவரியவான்கள் | a. எபிரெயர் **10:22** |
| ————————— | ஜீவனுள்ள நம்பிக்கை நிச்சயத்தைக் கொண்டு வருகிறது | b. கொலோசெயர் **2:2** |
| ————————— | முழுமையான விசுவாசம் பூரண நிச்சயத்தைக் கொண்டு வருகிறது | c. ஏசாயா **32:17** |
| ————————— | கிறிஸ்துவின் நீதியில் வைக்கும் உங்களது நம்பிக்கை பூரண நிச்சயத்தைக் கொண்டு வருகிறது | d. எபிரெயர் **6:11,12** |

**10.** தாங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை அறிந்திருந்த பழைய, புதிய ஏற்பாட்டு மனிதர்கள் யார் ? வேதவசனம் எழுதுக.

a. ————————————————————————————————————

b. ————————————————————————————————————

c. ————————————————————————————————————

d. ————————————————————————————————————

e. ————————————————————————————————————

f. ————————————————————————————————————

**11. பொருத்துக :–** (கொடுக்கப்பட்டிருக்கும் வார்த்தைக்கு முன்பு சரியான வசனத்தை எடுத்து எழுதவும்)

| | | |
|---|---|---|
| ————————— | தேவன் நமது பாவத்தை நீக்கியிருக்கிறார் | a. **1** பேதுரு **1:5** |
| ————————— | தேவன் நமது பாவங்களை நினைப்பதில்லை | b. ரோமர் **8:38,39** |
| ————————— | விசுவாசிகள் பரிபூரணமாக்கப்பட்டுள்ளனர் | c. எபிரெயர் **8:12** |
| ————————— | விசுவாசிகள் தேவனின் வல்லமையால் பாதுகாக்கப்படுகின்றனர் | d. எபிரெயர் **9:26** |
| ————————— | தேவனின் அன்பிலிருந்து ஒரு விசுவாசியை எதுவும் பார்க்க முடியாது | e. எபிரெயர் **10:14** |

**12.** ஒரு விசுவாசிக்கு இரட்சிப்பின் நிச்சயத்தைக் கொடுக்கும் **இரண்டு** வேதவசனங்களை எழுதவும் :–

a. ————————————————

b. ————————————————

13. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வாக்கியங்களின் வரிசைக்கு ஏற்ப 1–5 எண்களைக் குறிக்கவும் :–

--------- கிறிஸ்துவை ஆண்டவராகவும், இரட்சகராகவும் உனது வாயினால் அறிக்கை செய்யவும்

--------- நீ குற்றவாளி என்பதையும், உனக்கு கிறிஸ்து தேவை என்பதையும் பரிசுத்த ஆவியானவர் உணர்த்தட்டும்

--------- மனந்திரும்பு

--------- கிறிஸ்து செய்து முடித்த பணியில் நம்பிக்கை வை

--------- கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதை அறிந்து கொள்வது

14. **நிரப்புக :–** சபையின் ஆரம்ப நாட்களில் விசுவாசிகள் தங்களின் விசுவாசத்தையும், நிச்சயத்தையும் பெலப்படுத்தும் **ஏழு** காரியங்களை செய்து வந்தனர். அவைகள் என்னவென்பதை கீழே உள்ள தேவையான வார்த்தைகளைப் பயன்படுத்தி எழுதவும். (சபையில், ஐக்கியம், பாவம், ஏற்றுக்கொள்ளுதல், பரிசுத்த ஆவி, அப்பம், ஜெபம், ஞானஸ்நானம், அப்போஸ்தலருடைய உபதேசத்தில்)

1. வேதவசனத்தை அவர்கள் ----------------------
2. அவர்கள் ---------------------- எடுத்தனர்
3. அவர்கள் ---------------------- இணைந்தனர்
4. ---------------------- உறுதியாய் தரித்திருந்தார்கள்.
5. அவர்களிடத்தில் ---------------------- காணப்பட்டது
6. அவர்கள் சேர்ந்து ---------------------- பிட்டனர்
7. அவர்கள் கூடி ---------------------- செய்தனர்

---

அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்

பதிவு எண் : ____________________

முழு பெயர் : ____________________________________________

முகவரி : ____________________________________________

____________________________________________